**செய்தி வெளியீடு எண்: 79/2022** **நாள்: 15.08.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில்**
**95 நபர்களுக்கு முதன்மை செயலாளர் மு.அ.சித்திக் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்**

இந்தியத் திருநாட்டின் சுதந்திர தின விழா கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும் / முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர், சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சுறுசுறுப்பான நடை (Brisk Walk) மற்றும் நடைப்போட்டி (Walkathon) ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 52 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குக்கும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் 37 அலுவலர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையிலும் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பிள்ளைகளில் கடந்த கல்வியாண்டில் 80 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற 6 மாணவ, மாணவியர்களுக்கும், ஆகமொத்தம் 95 நபர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும் / முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா (நிதி), முதன்மை பாதுகாப்பு அதிகாரி டாக்டர். எஸ். பிராபாகரன், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**